# VG BUSINESS MAGAZINE

FOR INTERNAL CIRCULATION ONLY

NOV - 2021



**வேட்டுவக்கவுண்டர் வணிகர்களை ஆதரிப்போம்**

**மாதம்**
November - 2021

**இதழ்**
5

**ஆசிரியர்**
கவிதா வாழைபரமேஸ்வரன்

**இணை ஆசிரியர்**
Dr.வாழைபரமேஸ்வரன்

**வடிவமைப்பு**
கவிதா வாழைபரமேஸ்வரன்

**MOBILE**
90037 95243

**EMAIL**
vgbusinesstycoons@gmail.com

**WEBSITE**
vgtycoons.com

**For Internal Circulation Only**

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே...

# முகவுரை

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் கொண்டாடப்படும் ஒரே பண்டிகையாக தீபாவளி பண்டிகை திகழ்ந்து வருகிறது. ஏழை பணக்காரர் வித்தியாசமின்றி அவரவர் வசதிக்கேற்ப இந்த பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடுவது வழக்கம். தீபாவளியன்று அதிகாலை எண்ணெய் குளியல் முடித்து, புத்தாடை, பலகாரங்களை வைத்து சுவாமி கும்பிட்டு, பெரியவர்களை வணங்கி, புத்தாடை அணிந்து கொண்டாடப்படும். அக்கம்பக்கத்தினருக்கும், உறவினர்களுக்கும் பரஸ்பரம் பலகாரங்களை பரிமாறிக் கொண்டு தீபாவளியை சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். புத்தாடைகள், இனிப்புகள், பட்டாசு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவற்றை வாங்கும் பொழுது நம்மின வணிகர்களிடம் வாங்கினால் அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள்; நமக்கும் மனத்திருப்தி உண்டாகும். நமது வேட்டுவக்கவுண்டர் சமுதாய வணிகர்களை ஆதரித்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் நாமும் நம் சமுதாயமும் எளிதாக முன்னேற முடியும்.

அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்....



**கவிதா வாழைபரமேஸ்வரன்**




**VG Business Magazine October 2021** இதழை முழுமையாக படித்தேன். மிக அருமை. எனது மனமார்ந்த பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

**-- திரு.தேவராஜன், மாரப்பம்பாளையம்.**

மிகவும் சுவாரஸ்யமான வாழ்க்கை மற்றும் வணிக பயணங்கள்.. இது மற்றவர்களைப் போல வெற்றியை அடைய எங்களுக்கு ஊக்கமளிக்கும். மிக்க நன்றி.

**-- Agam Diagnostics, Coimbatore.**

அக்டோபர் மாத இதழ் மிக அருமை. நானும் ஒரு ஆசிரியர் என்பதால் கண்மணி டீச்சர் அவர்களின் சேவை கவர்ந்திழுக்கிறது. கே.வி.கே ஐயாவின் வரலாறு அருமை. அவரது பள்ளியில் தான் நான் படித்தேன் என்பது எனக்கு பெருமை. கெமிக்கல் இன்டஸ்டிரியல் A.மணி அவரின் வணிக யுக்தி அருமை. திரு. வாழை பரமேஸ்வரன் ஐயா கூறிய புதிய வணிகம் தொடங்குவோருக்கான அறிவுரைகள் மிக மிக அருமை. எளிய நடையில் எண்ணிலடங்கா அறிவுரைகள்.. நன்றி நன்றி

**-- சண்முகன்சுப்பிரமணியன் சின்ன குமாரபாளையம்.**

தொழில் துறைக்கு முக்கியத்துவம் அளித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மலர் சிறக்க வாழ்த்துக்கள்.

**-- திரு. சாந்தகுமார், கோயம்புத்தூர்.**

தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு நம் உறவுகள் வணிகத்திலும் சுய தொழில் செய்யவும் நம்பிக்கை விதையை விதைக்கும் அறுமையான கட்டுரைகள். நம் வணிக மேம்பாட்டு அமைப்பு நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்கள் நன்றி..

**-- SREE VARRI LATHE WORKS.**

மிகவும் நேர்த்தியான முறையில் வடிவமைக்கப் பட்டுள்ளது குறிப்பாக திரு. கே வி கே அய்யாவை பற்றி, அவர் ஆற்றிய சேவை சிலது மட்டுமே தெரியும். ஆனால் நமக்கு தெரியாத அவர் செய்த சேவைகள் பல உள்ளதை இதன் மூலம் நாம் தெரிந்து கொண்டோம் நன்றி அடுத்த இதழை எதிர்பார்த்து

**-- LIC BALU.**

வி.ஜி வணிக மேம்பாட்டு அக்டோபர் மாத பதிப்பு **Pdf** பதிவாக பதிவேற்றியிருந்தீர்கள். மிகவும் அருமையான, நமது இன மக்கள் கற்று, கண்ணுற்று, பயன்பெறும்படி மிகவும் நேர்த்தியான பதிப்பு. இதில் கண்மணி ஆசிரியர் அவர்களின் அர்ப்பணிப்பு எந்தவிதமான வசதிகளும் இல்லாத அரசு பள்ளியை மாணவர்களுக்கு உகந்த பள்ளியாக மாற்ற அவர் எடுத்துகொண்ட பெருமுயற்சி போற்றதக்கது. நம் இனத்தில் இன்னும் வள்ளல் தன்மை கொண்ட நல்ல உள்ளங்கள் இருப்பதையும், அவர்கள் ஆற்றிய அரும்பணிகளையும் படித்ததில் கண்கள் நிறைந்து விட்டன. கண்மணி ஆசிரியை அவர்களின் நற்செயல்கள் தொடர கடவுளை வேண்டுகிறேன்.

**-- ஈட்டி விஜயேந்திரன்,**
**த/பெ ஆறுமுககவுண்டர்.**

அழகான வடிவமைப்புடன், தரமான கட்டுரைகளுடன், அனைவரையும் கண்கவரும் வகையில் அமைந்துள்ளது. நல்வாழ்த்துக்கள் Mr & Mrs வாழை பரமேஸ்வரன்.

**-- தினத்தந்தி ரமேஷ், கவுந்தப்பாடி.**

மிகவும் தெளிவாகவும் அழகாகவும் வெளியிட்டுள்ளீர்கள். தாங்கள் பொதுவான ஒரு பதிப்பை வெளியிட்டால் மிக சிறந்த புத்தகமாக இருக்கும். வாழ்த்துகள் சகோதரி...

**-- LIC கோவிந்தராஜூ, கவுந்தப்பாடி.**

தீபாவளி பரிசு போட்டியில் கலந்து கொள்ள வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் சிறப்பு... மிகச்சிறப்பு....!!!

**-- திரு.L.K.சிவக்குமார்.**

தொழில் நேர்த்திகளுடன் நம் முன்னோர் வரலாறு மற்றும் தற்போது விழித்தெழும் நம்மின தொழில் முனைவோர்களுக்கு ஒரு உத்வேகம் தரும் வழிமுறையாக உருவாகியுள்ளது நம் வேட்டுவர் வணிக இதழ். பலரும் அறியாத பெரும் தொழில் முனையும் சொந்தங்களை இதன் மூலம் அறிந்து கொண்டுள்ளோம் என்பதை இங்கு பதிவு செய்யக் கடமைப் பட்டுள்ளோம்.

**-- Madhan, Think Aside.**

**Please add one page about wealth management such as savings, investment opportunities, fixed deposits, mutual fund, share market...**

**-- Dr. Shasikala, VIT.**

**Congratulations Valai Paramesh and Kavitha Valai Paramesh. Business Magazine is a wonderful magazine. It gives lot of informations regarding the business to our young community people.**

**-- Dr. Punniya Krishnan, Bhavani.**




# ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜை

**ஸ்ரீ** லட்சுமி குபேர பூஜை செய்ய தீபாவளி திருநாள் உகந்தது. மேலும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் பூரட்டாதி நட்சத்திரம் வரும் நாளில் பூஜை செய்வது மிகுந்த பலன்களை தரும்.

ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை குபேர காலமாகும். இந்த பூஜை சிறப்பு மிக்கது. குபேரன் தனது செல்வம் அனைத்தையும் இழந்து நின்ற போது லட்சுமி தேவியை வணங்கி எந்திரத்தைப் பெற்றான். அந்த எளிய குபேர பூஜையை விரதமிருந்து செய்தால் நலம் விளையும். இதை செய்வதால் கடன் தீரும். செல்வம் பெருகும். ஆண்டுக்கு 2 முறை செய்தால் பணத்தட்டுப்பாடு இருக்காது.

வடஇந்தியாவில், தீபாவளி அன்று இரவில் குபேரனை விசேஷமாக தங்க, வெள்ளி நாணயங்களை வைத்து வழிபடும் பழக்கம் உள்ளது. லட்சுமி குபேர பூஜை என்பது வேதமந்திரங்கள் ஒத கலசம் வைத்து செய்யப்பட வேண்டும். சாதாரணமாக வீட்டில் நாமே செய்வது என்றால் பூஜை மாடத்தில் லட்சுமி குபேர படத்தினை வைத்து இருபக்கமும் குத்துவிளக்கு ஏற்ற வேண்டும். இப்படத்திற்கு முன்பாக பெரிய வாழை இலை வைத்து அதில் நவதானியங்களை தனித்தனியாக பரப்பி வைக்க வேண்டும்.

நடுவில் சுத்தமான தண்ணீர் நிரம்பிய சொம்பை வைத்து அதில் மஞ்சள் கலந்து பின் மாவிலையை சொருகி அதன் மேல் ஓர் தேங்காய் வைத்திட வேண்டும். அதற்கு மஞ்சள், குங்குமம் வைத்து பூக்களால் அலங்கரித்திட வேண்டும். பின் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து பூஜையை ஆரம்பித்திட வேண்டியதுதான். நமக்கு தெரிந்த விநாயகர் பாடல்கள் பாடி பூஜையை செய்ய வேண்டும். பின் மகாலட்சுமியை வணங்கி போற்றி வழிபட வேண்டும்.

அதன் பின் குபேரமந்திரங்கள் (அ) "குபேராய நமஹ" "தன்பதியே நமஹ" என 108 முறை சொல்லி தாமரை இதழ்கள் (அ) பூக்களால் பூஜிக்க வேண்டும். தாமரை மலர் லட்சுமி மற்றும் குபேரனுக்கு உகந்த மலர்.


பின்னர் நைவேத்தியம் இனிப்பு மற்றும் பால் பாயாசம் போன்றவை வைத்து பூஜை முடித்திட வேண்டும். பூஜையில் தட்சணையாக காசுகள் வைக்கப்பட வேண்டும். பூஜை முடிந்தவுடன் எடுத்து நமது பெட்டகங்களில் வைத்துவிடலாம். சிலர் தாம்பூலங்களையும், காசுகளையும் தானமாக வழங்கிடுவர். லட்சுமி குபேர பூஜை தீபாவளி தினத்தில் செய்யும்போது வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்வதுடன் குபேரன் சகல ஐஸ்வர்யத்தையும் வாரி வழங்கிடுவார்.




**கட்டுரையாளர்**



திருமதி. பூங்கொடி சுந்தர்ராஜ்
தரணி ஹெர்பல்ஸ்




**தீ**பாவளி பண்டிகை தினத்தில் புத்தாடை, இனிப்பு, பட்டாசு ஆகியவற்றை தாண்டி, அன்று கங்கா ஸ்நானம் எனும் எண்ணெய் தேய்த்து குளித்தல் என்ற முக்கிய சடங்கு உள்ளது. அதன் முக்கியத்துவம் என்ன, ஏன் எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும், அதன் அவசியம் மற்றும் பலன்கள் குறித்து இங்கு விரிவாக பார்க்கலாம்...

### கங்கா ஸ்நானம் என்றால் என்ன ?

கிருஷ்ணன் நரகாசுரனை அழித்த நாளே தீபாவளி. அன்று சிவபெருமான் உலகிலுள்ள நீர்நிலை அனைத்திற்குமே கங்கையின் புனிதத்தை வழங்குகிறார் என்பது ஐதீகம். வீட்டில் உள்ள கிணறு, குழாய் ஆகியவற்றில் வரும் தண்ணீர் அனைத்தும் கங்கை நீராகவே பாவிக்கப்படும். இதனால்தான் தீபாவளி அன்று காலையில் நீராடுவதை கங்காஸ்நானம் என்று சொல்கிறார்கள். அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து தலை முழுகினால் நம் பாவம் எல்லாம் போய்விடும் என்பது நம்பிக்கை.

## எண்ணெய் குளியல்

நான்கு நாட்களுக்கு ஒருமுறை எண்ணெய் குளியல் அவசியம் என்கிறது சித்த மருத்துவம். கோடைக்காலம் என்றால் வாரம் இருமுறை, மழைக்காலம் என்றால் வாரம் ஒருமுறை எண்ணெய் குளியல் எடுக்க வேண்டும்.

சனி நீராடு என்பது பழமொழி. பொதுவாக ஆண்கள் புதன் மற்றும் சனிக்கிழமைகளிலும் பெண்கள் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் எண்ணெய் குளியல் எடுப்பது நல்லது. தற்போது உள்ள காலத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் குறைந்து வருவதால், குறைந்த பட்சம் தீபாவளி அன்றாவது எண்ணெய் தேய்த்துக் குளித்து கங்கா ஸ்நானம் செய்வது அவசியம்.

தீபாவளி நாளில் எண்ணெயில் மகா லட்சுமி, சீயக்காயில் சரஸ்வதி, வெந்நீரில் கங்கா தேவி குடிகொண்டிருப்பாள். அதனால், தீபாவளியன்று எண்ணெய் தேய்த்து குளித்தல் வேண்டும். சுவாமி படத்திற்கு முன் ஒரு கிண்ணத்தில் எண்ணெய்,சீயக்காய் வைத்து, “எங்கள் குடும்பத்தில் அனைவரும் உடல் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்” என வேண்டிக்கொண்டு, வீட்டின் பெரியவர் மற்றவர்களின் தலையில் எண்ணெய் வைக்க வேண்டும்.



## எண்ணெய் குளியலுக்கு ஏற்ற எண்ணெய் எது?

எண்ணெய் குளியலுக்கு நல்லெண்ணெய் மிகவும் உகந்தது. அதேபோல நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் ஆகிய மூன்றையும் குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து முக்கூட்டு எண்ணெய்யாகவும் பயன்படுத்தலாம்.

சிலர் எண்ணெய் தேய்த்துக்கொண்டு பச்சைத் தண்ணீரில் குளித்துவிடுவார்கள். இதனால் சளி, காய்ச்சல் போன்ற பிரச்னைகள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, எப்போது எண்ணெய் தேய்த்துக்கொண்டாலும் வெந்நீரில்தான் குளிக்க வேண்டும். “எண்ணெய் பெறின், வெந்நீரில் குளிப்போம்” என்பதைத்தான் சித்த மருத்துவமும் வலியுறுத்துகிறது.

வெது வெதுப்பான நல்லெண்ணய்யை உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை தடவி அரை மணிநேரம் வெயிலில் இருந்துவிட்டு பின்னர் வெந்நீரில் குளிப்பதே முறையான எண்ணெய் குளியல் ஆகும்.












### தீபாவளியன்று காலையில் எத்தனை மணிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நல்லது?

மற்ற நாட்களில் சூரிய உதயத்திற்கு பின்பே எண்ணைய் தேய்த்து குளிக்க வேண்டும். ஆனால் தீபாவளி அன்று அம்மாவாசை என்பதால் அன்று மட்டும் சூரிய உதயத்திற்கு முன்பே எண்ணைய் தேய்த்து குளிக்க வேண்டும். சூரிய உதயத்திற்கு முன்பே அதிகாலையில் 4 மணி முதல் 5.30 மணிக்குள் கங்கா ஸ்நானம் செய்து விட வேண்டும்.

### இயற்கை குளியல் பொடிகளே சிறந்தது!

எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போது சோப்பு, ஷாம்பூ போன்றவற்றை பயன்படுத்த கூடாது. சிகைக்காய், அரப்பு, பயத்த மாவு போன்ற இயற்கை குளியல்பொடிகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். உடலுக்கு நலங்கு மாவு தேய்த்து குளிக்கலாம். இதுபோன்ற பொடிகளைத் தேய்த்துக் குளிக்கும்போது சருமத்தில் உள்ள எண்ணெய்ப் பிசுபிசுப்பு, அழுக்குகள் போன்றவை நீங்குவதோடு சருமத்துக்கு பொலிவும் கிடைக்கும்.






எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு, தலைக்கு சாம்பிராணி புகை போடுவது மிகவும் நல்லது. தலையில் சேர்ந்திருக்கும் நீரை சாம்பிராணிப் புகை எடுத்துவிடும்.

### எண்ணெய் குளியலின் பலன்கள்:

எண்ணெய் தேய்த்துக் கொண்டு கால் அல்லது அரை மணி நேரமாவது இளம் வெயிலில் நில்லுங்கள். உங்களுக்கு தேவையான கால்சியம், நல்லெண்ணெய் மூலமும் மற்றும் வைட்டமின் D, சூரிய ஒளி மூலமும் உங்கள் உடலுக்கு கிடைக்கும். எண்ணெய் குளியலின் மூலம் நம் உடலில் உள்ள உஷ்ணம் குறையும், உடல் அசதி நீங்கும், புத்துணர்ச்சி கிடைக்கும்.

உடலுக்கு உற்சாகத்தையும், சருமத்துக்கு பொலிவையும் எண்ணெய் குளியல் தரும். தைராய்டு பிரச்சனைகள், எலும்பு தேய்மானம், தலைவலி, மூட்டுவலி, கால்வலி, உடல்வலி, கண் எரிச்சல் போன்ற பிரச்சனைகள் தீரும். ஆரோக்கியமான தூக்கம் வரும். பித்தம் குறைந்து ரத்த ஓட்டம் சீராக இருக்கும். மன அழுத்தத்தை குறைக்கும். சரும நோய்கள் நீங்கும். முடி கொட்டுவது குறைந்து, நன்கு வளரும்.

வருடத்தில் மற்ற நாட்களில் எண்ணெய் குளியலை தவிர்த்தவர்கள் கூட தீபாவளி அன்று ஒரு நாளாவது எண்ணெய் குளியல் போடுவதால் பல நன்மைகளை பெறலாம். எனவே, நன்மைகளின் சுரங்கமாக இருக்கும் எண்ணெய் குளியலை வரும் தீபாவளியிலிருந்தாவது பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

# சினிமாதான் என் வாழ்க்கை



## டைரக்டர் சலங்கை துரை

சினிமா துறையில் இயக்குனர், கதாசிரியர், தயாரிப்பாளர் என முத்திரை பதித்து வருபவர் சலங்கை துரை அவர்கள். ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி அருகிலுள்ள சலங்காபாளையத்தை சேர்ந்தவர். இவர் நமக்கு அளித்த பிரத்யேக பேட்டியிலிருந்து...

**சினிமா துறையில் ஆர்வம் வர காரணம்?**

பள்ளிக்கூடம் படிக்கும் வயதிலிருந்தே பத்திரிகைகளில் தொடர்ந்து கதை, கவிதை, ஜோக்குகள் எழுதி வருவேன். மேலும் பள்ளி, கல்லூரி மற்றும் ஊர் திருவிழாக்களில் நடைபெறும் நாடகங்களில் பங்கேற்று கதை, திரைக்கதை, வசனம் எழுதி நடித்தும் வந்தேன். சினிமா டைரக்டர் ஆவதற்கு ஆர்வம் வர முக்கிய காரணம் டைரக்டர் பாக்யராஜ் அவர்களின் ஒரு கை ஓசை, முந்தானை முடிச்சு, தூறல் நின்னு போச்சு போன்ற படங்களின் சூட்டிங் நம்ம ஏரியாவில் நடந்தது. அதை வேடிக்கை பார்த்து அதன் மூலம் எனக்குள் சினிமா ஆர்வம் தொற்றிக் கொண்டது.

**இந்தத் துறைக்கு வந்தது எப்படி?**

கோபி ஆர்ட்ஸ் காலேஜில் பிகாம் முடித்த பிறகு சினிமாவில் வாய்ப்பு தேடி சென்னை கிளம்பி விட்டேன். நான் சென்னைக்கு வரும் பொழுது அங்கு யாரையும் தெரியாது. மந்திரி கவுண்டர் அவர்களின் மூலமாக இச்சிபாளையத்தைச் சேர்ந்த டாக்டர் தனபால் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அவரது வீட்டில் தங்குவதற்கு இடமும் கிடைத்தது. தினந்தோறும் வேப்பேரியில் இருந்த அவரது வீட்டில் இருந்து கிளம்பி கோடம்பாக்கம் சென்று வாய்ப்பு தேடுவேன். என்ன பெத்த ராசா, தங்கத்தின் தங்கம், ஊரெல்லாம் உன் பாட்டு போன்ற படங்களை இயக்கிய டைரக்டர் சிராஜ் அவர்களிடம் ( பாக்கியராஜின் சிஷ்யர் ) பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. ராமராஜன் நடித்த ஊரெல்லாம் உன் பாட்டு என்னும் படத்தில் முதன் முதலாக பணியாற்றினேன். பிறகு டைரக்டர் பாக்யராஜின் கம்பெனியில் சேர்ந்து ஆயுதபூஜை, ரெட்டை ஜடை வயசு போன்ற படங்களுக்கு அசோசியேட் டைரக்டராக பணிபுரிந்தேன். ஆயுத பூஜை படத்தில் வசனகர்த்தாவாகவும் பணியாற்றியுள்ளேன்.




**நடிகர் அஜீத்துடன் பழகிய அனுபவம்?**

அஜித் அவர்கள் மனிதநேயமிக்க ஒரு நல்ல மனிதர். அவரைப் பற்றி பேசுவதென்றால் பேசிக்கொண்டே இருக்கலாம். ரெட்டை ஜடை வயசு படம் பண்ணும் போது அஜீத் சார் என்னுடன் ஒரு நல்ல நண்பர் போல பழகுவார். அவுட்டோர் ஷூட்டிங் போகும்பொழுது ஒரே ரூமில் நாங்கள் தங்கி இருப்போம். "ஏதாவது பண உதவி வேண்டுமென்றாலும் எப்ப வேண்டுமானாலும் என்னை வந்து பாருங்கள்" என்று கூறியிருக்கிறார். "ஒரு டைரக்டராக சாதிக்க வேண்டும் என்பதே எனது லட்சியம் எனக்கு ஒரு படம் பண்ணி கொடுங்க. அதுவே போதும் அதன்பின் பணம் தன்னாலே வரும்" என்று பதில் கூறுவேன். ரெட்டை ஜடை வயசு படத்திற்கு பிறகு அடுத்தடுத்த படங்கள் ஹிட்டாகி அவர் பெரிய ரேஞ்சுக்கு போய்விட்டதால் அவருடன் படம் பண்ண இயலவில்லை. ஆனாலும் எங்கே சந்தித்தாலும் "என்ன துரை எப்படி இருக்கீங்க" என்று நலம் விசாரிப்பார்.



### முதல் பட அனுபவம் ?

நடிகர் கரணை வைத்து காத்தவராயன் திரைப்படத்தை இயக்கினேன். ஆரம்பத்தில் அந்த படத்தில் கரண் இல்லை. சிபிராஜை வைத்து இயக்கும் எண்ணத்தில் சத்யராஜை சந்தித்து கதை சொன்னேன். அவருக்கு கதை பிடித்து இருந்ததால் சிபிராஜை நடிக்க வைக்க சம்மதம் தெரிவித்தார். ஆனால் சூழ்நிலை சரியாக அமையாத காரணத்தினால் அந்த திட்டம் கைவிடப்பட்டது. அதன் பிறகே கரணிடம் கதை சொல்லி ஷூட்டிங்கை தொடங்கினேன். அந்த படத்தின் தயாரிப்பாளர் திரு. ராமச்சந்திரன் அவர்கள். 3 கோடி ரூபாய் பட்ஜெட்டில் அந்தப் படம் உருவானது. வியாபார ரீதியாக மிகப்பெரிய வெற்றியடைந்த படம் அது. சமுதாய சீரழிவுகளுக்கு முதல் காரணம் குடிதான். குடியின்




தீமைகளைப் பற்றி எடுத்துச் சொன்ன படம் அது. அந்தப் படத்தில் நடித்ததற்காக சிறந்த நகைச்சுவை நடிகருக்கான மாநில விருது வடிவேலு அவர்களுக்கு கிடைத்தது. காத்தவராயன் படம் வந்து பல வருடங்கள் ஆனாலும் இன்னும் அந்த படத்தில் இடம்பெற்ற காமெடி மறக்க முடியாததாக உள்ளதாக மக்கள் அனைவரும் பாராட்டுகின்றனர்.

**நடிகர் வடிவேலுவைப் பற்றி?**

வடிவேலு அவர்கள் மிகச் சிறந்த நடிகர். நான் அவரிடம் ஒரு சீன் சொல்லும் போதே அவர் அதை டெவலப் பண்ண ஆரம்பித்து விடுவார். அந்த படத்தில் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்குபவராக நடித்திருப்பார். அந்த கேரக்டராகவே மாறி வட்டிக் கடைக்காரர்கள் பற்றிய விஷயங்களை உள்வாங்கிக் கொண்டு இயல்பாக நடித்து கொடுத்து இருப்பார். காமெடி சீன்கள் நல்ல முறையில் வரவேண்டும் என்பதற்காக ரொம்பவே மெனக்கெடக் கூடியவர். இன்றும் அவரைப் பார்ப்பதற்காக அவரது ஆபிசுக்கு சென்றால் அங்குள்ளவர்களிடம் எனக்கு பெஸ்ட் காமடியன் அவார்டு வாங்கித் தந்த காத்தவராயன் பட டைரக்டர் என்று கூறி என்னை அறிமுகப்படுத்துவார்.



**ஷூட்டிங் ஸ்பாட்டில் நடந்த மறக்க முடியாத சம்பவம்?**

1998ல் வீரன் மருது மாணிக்கம் என்ற வரலாற்று சீரியலை இயக்கினேன். 13 வார தொடராக தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகியது. அந்த சீரியலுக்காக தளக்கோணம் அருகிலுள்ள காட்டுப்பகுதியில் யாருமே போகமுடியாத இடங்களிலெல்லாம் சென்று படப்பிடிப்பு நடத்தினோம். சூட்டிங் முடிந்த பிறகு இரவு நேரத்தில் திரும்பி வர வழி தெரியாமல் மாட்டிக் கொண்டோம். அப்பொழுதெல்லாம் செல்போன் வசதி கிடையாது. மிகுந்த சிரமத்திற்கு இடையே நாங்கள் காட்டுப் பகுதியில் இருந்து வெளி வந்தோம். அதைத் தொடர்ந்து சன் டிவியில் ஒளிபரப்பான பஞ்சமி சீரியலும் அதே காட்டுப்பகுதியில் படப்பிடிப்பு நடைபெற்றது. ஏற்கனவே சென்ற அனுபவத்தை வைத்து சமாளித்தோம். மேலும் 24 மணி நேரத்தில் எடுக்கப்பட்ட கின்னஸ் சாதனை படைத்த சுயம்வரம் என்னும் திரைப்படத்தில் பணிபுரிந்ததும் ஒரு மறக்க முடியாத அனுபவம்.

**டைரக்சன் செய்வதில் உள்ள சவால்கள்?**

டைரக்சன் விஷயத்தில் மிகப் பெரிய சவால் என்னவென்றால் நமது படத்திற்கான புரொடியூசர் தேடிப் பிடிப்பது தான். நல்ல கதையை உருவாக்கினாலும் அதற்கான புரொடியூசர் கிடைப்பது கடினம். நம்மிடம்



உள்ள மொத்த கதைகளையும் தூக்கிக் கொண்டு ஒவ்வொரு தயாரிப்பாளர்களாக அணுகி கதை சொல்ல வேண்டும். யாருக்கு எந்த கதை பிடிக்கும் என்று சொல்ல முடியாது. புரொடியூசர் எந்த நடிகரின் கால்ஷீட் வைத்திருக்கிறாரோ அந்த நடிகருக்கு ஏற்ப நாம் கதை சொல்ல வேண்டும். நல்ல தயாரிப்பாளர் கிடைப்பதே முதல் வெற்றி.

**உங்களின் அடுத்த படங்களை பற்றிய தகவல்கள்?**

இரண்டு படங்கள் முடிவடைந்து வெளியிட தயார் நிலையில் உள்ளது. இ. பி. கோ 302 கஸ்தூரி நடிக்கும் கிரைம் திரில்லர் படம். அடுத்தது கடத்தல் என்னும் படம். இந்த இரண்டு படங்களும் நன்றாக வந்துள்ளன. படம் ரிலீஸ் ஆன பிறகு மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

அடுத்ததாக விஜய் சேதுபதியை வைத்து படம் எடுப்பதற்காக அவரிடம் கதை சொல்லி பேச்சுவார்த்தை நடந்து கொண்டுள்ளது. தயாரிப்பாளர் சரியாக அமையாததால் இன்னும் பேச்சுவார்த்தை நிலையிலேயே உள்ளது.






**புது டைரக்டர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் கருத்து?**

சினிமா துறையில் சாதிக்க விரும்பும் புது டைரக்டர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் எப்பொழுதும் கைவசம் இரண்டு, மூன்று கதைகளாவது வைத்திருக்க வேண்டும். எப்போது வாய்ப்பு கிடைத்தாலும் செய்ய தயார் நிலையில் இருக்க வேண்டும். முதல் படம் முடிவடைந்த பிறகு அடுத்த படத்திற்கான கதையை தயார் பண்ணிக் கொள்ளலாம், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தால் சினிமா உலகம் நம்மை மறந்து விடும்.

**எதிர்கால லட்சியம்?**

கண்தானம் என்னும் விஷயத்தை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் கண்ணப்ப நாயனார். அவர் சாதாரண வேடர் அல்ல. வேட்டுவர் தலைவர், திருப்பதியை மலையை ஆண்டு வந்தவர். அவரது கதையை திரைப்படமாக எடுக்க வேண்டும் என்பதே என்னுடைய லட்சியம்.

**டைரக்டர் சலங்கை துரை அவர்களின் கடத்தல் மற்றும் இ. பி. கோ. 302 படங்கள் வெற்றி பெற vg business magazine வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

# வீடு தேடி வரும் புத்தாடைகள்



தீபாவளி என்றாலே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் புத்தாடைகள் அணிந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது என்பது மரபு. வண்ண உடைகளை அணிந்து, பட்டாசு வெடித்து, தீபத்தை ஏற்றி வழிபடும் தீபாவளி திருநாள் எப்போது வரும் என்று பல குழந்தைகள் காத்திருக்கும். முன்பெல்லாம் தீபாவளிக்கு துணி எடுக்க பலரும் பிரபலமான ஜவுளிக் கடைகளை நோக்கியே படை எடுத்து வந்தார்கள். அதனால் ஜவுளி கடைகள் மட்டுமல்ல, அந்த தெருவில் கூட நிற்பதற்கு இடமிருக்காது. அவ்வளவு கூட்டம் வழிந்தோடும். எல்லா ஊர்களிலும் கடைதெருக்களில் கட்டுக்கடங்காமல் கூட்டம் அலைமோதும்.






## ஆன்லைன் ஷாப்பிங் :

ஆனால் இப்பொழுது கடை கடையாய் ஏறி இறங்கிய காலம் மலையேறிப் போச்சு. பண்டிகை வந்தாலே 15 நாட்களுக்கு முன்பிருந்தே கடை வீதிக்கு போய் துணிகளை தொட்டு, தடவிப் பார்த்து வாங்கிய காலம் மலையேறி வருகிறது. இந்த கொரோனா கால கட்டத்தில் மக்கள் அங்கே இங்கே அலையாமல் விரல் நுனியில் பொருட்களை வாங்கி குவித்து வருகின்றனர். பண்டிகை காலங்களில் கூட்ட நெரிசலில் சிக்காமல் தங்களுக்கு விருப்பமான நேரத்தில் பொருட்களை எளிதாக வாங்கி கொள்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாகவே ஆன்லைனில் ஷாப்பிங் செய்வது அதிகரித்து வருகிறது.

## VG BOUTIQUE & COLLECTIONS

ஒசூரில் வசிக்கும் திருமதி. தங்கமணி மற்றும் திருமதி. மோகனசுந்தரி இருவரும் இணைந்து பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடை வகைகளை ஆன்லைன்னில் விற்பனைசெய்து வருகின்றனர்.



வீட்டில் இருந்தபடியே இவர்கள் உற்பத்தியாளர்கள் அனுப்பும் புகைப்படங்களை தங்களது வாட்ஸ் அப் குரூப்களுக்கு ஃபார்வார்டு செய்கின்றனர். இவர்களது குரூப்பிலுள்ள வாடிக்கையாளர்கள், அவர்கள் விரும்பும் ஆடைகளை தேர்வு செய்த பின் உற்பத்தியாளர்களே நேரடியாக வாடிக்கையாளர்களின் முகவரிக்கு ஆடைகளை கொரியர் மூலமாக அனுப்பி வைத்து விடுவர். கூகிள் பே மூலமாக வாடிக்கையாளர்கள் பணத்தை செலுத்துகிறார்கள். உற்பத்தியாளர்களுக்கும் வாடிக்கையாளார்களுக்கும் இடையே பாலமாக செயல்படும் இவர்கள் உதவியால் வீட்டில் இருந்தபடியே நம்மால் எளிதில் ஷாப்பிங் செய்து விட முடிகிறது. மேலும் உற்பத்தியாளர்களிடமிருந்தே நேரிடையாக ஆடைகளை வாங்குவதால் நமக்கும் பணம் மிச்சமாகிறது. ஆன்லைன் ஷாப்பிங் மூலம் அலைச்சல் இல்லாமல் ஷாப்பிங் செய்து பணம் மற்றும் நேரத்தை மிச்சப்படுத்துங்கள்.






# கண்களைக் கவரும் டிசைனர் பிளவுஸ்

வயது வித்தியாசம் இன்றி நாம் அணிந்து கொள்ளும் ஆடைகளில் புதுமையை விரும்பாதவர் யாரும் இல்லை. அதிலும் பெண்கள் ஒருபடி மேலே. வித விதமான வித்தியாசமான ஆடைகளை அணிந்து கொள்ளவே பெரிதும் விரும்புவார்கள். திருமணம், பண்டிகை, வீட்டு விசேஷம் போன்ற வைபவங்கள் என்றால் சொல்லவே வேண்டாம். அழகழகான டிசைனர் பிளவுஸ் தான் எப்போதும் பெண்களின் முதல் சாய்ஸாக இருக்கும். கரூரில் Meraki designs என்னும் பெயரில் பிளவுஸ் டிசைன் செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார் திருமதி.ரேகா தினகரன். இவர் ஹரிச்சந்திர வேட்டுவர் குலத்தை சேர்ந்தவர். இவரது தந்தை ஈரோடு முன்னாள் மேயர் குமார் முருகேஷ் ஆவார். கடந்த 2007ல் இருந்து இத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். திருமணப் பட்டுப் புடவைகளின் பிளவுஸ்களுக்கு டிசைன் செய்வதில் கைதேர்ந்த இவரிடம் பேசியதிலிருந்து....

மணப்பெண்ணின் தோற்றத்தை மெருகேற்றுவதில் எப்போதும் முதலிடம் பிடிப்பது டிசைனர் பிளவுஸ் தான். பிளவுஸில் பேட்டர்ன் வேலைப்பாடுகள் ஒரு ஸ்டைல் என்றால், ஆரி வேலைப்பாடுகள், ஸ்டோன் வேலைப்பாடுகள், எம்பிராய்டரி செய்வது போன்றவை எப்போதும் டிரெண்டிலிருக்கும் ஸ்டைல். டிசைனர் பிளவுஸ்களை பொறுத்தவரை நமது கற்பனைகளை கொண்டு வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்க்கு ஏற்ப டிசைன் செய்து தருகிறோம்.




சேலையின் வண்ணம், அதில் உள்ள டிசைன் அடிப்படையில் டிசைன்களை தேர்வு செய்வோம். காட் போட்டு அதில் பிளவுஸ் துணிகளை அசையாதபடி மாட்டி விட்டு பிறகு டிசைன் செய்கிறோம். நல்ல அழகான, தனித்துவமான டிசைன்கள் செய்து கொடுப்பதால் செவி வழியாக கேள்விப்பட்டு நிறைய பேர் தேடி வந்து டிசைன் செய்து கொண்டு போகிறார்கள். என்னிடம் இரண்டு பேர் பணிபுரிந்து வருகிறார்கள். முகூர்த்த நேரங்களில் வேலை அதிகமாக இருந்தால் மேலும் இருவரை அழைத்துக் கொள்கிறேன். என்னிடம் வேலை செய்பவர்களுக்கு மணிக்கு 120 ரூபாய் கூலி குடுக்கிறேன். வேலையை பொறுத்து ஒரு நாள் ஒன்றுக்கு 1000 ரூபாய்க்கும் மேல் அவர்களால் வருமானம் ஈட்ட முடியும்.




பொதுவாக சிம்பிள் டிசைன் என்றால் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் முடிந்துவிடும். வேலைபாடுகள் அதிகமுள்ள டிசைனாக இருந்தால் ஒரு வாரம் வரை கூட ஆகும். ஏனென்றால் அதிக வேலைப்பாடு உள்ள பிளவுஸ்களில் அதிக அளவில் நுணுக்கமான வேலைகள் இருக்கும். மேலும் ஃபினிஷிங் சரியாக இருந்தால் தான் பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். குறைந்தபட்சம் 2,000 ரூபாயில் இருந்து ஹெவி வொர்க் கேட்பவர்களுக்கு அதற்கு ஏற்றாற் போல் விலை கூட குறைய இருக்கும். நம் உறவினர்களுக்கு சலுகை விலையில் டிசைன் செய்து தர தயாராக உள்ளேன். திருமணம் போன்ற வைபவங்களுக்கு பட்டு புடவைகளுக்கான பிளவுஸ் டிசைன் செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண் 98429 90602.





தீபாவளி என்றாலே பலருக்கும் இனிப்புகள் தான் நினைவிற்கு வரும். விதவிதமான இனிப்புகளுக்கு என்றே அவதாரம் எடுத்த நாள் இது. இனிப்புகள் என்றாலே அது வேட்டுவர்களின் பாரம்பரிய உணவாகும். அன்றைய நாளில் வேட்டுவர்கள் திணைமாவில் தேனை கலந்து உண்ணுவார்கள். அவர்களின் வாழ்க்கை முறையில் தேன் முக்கிய உணவாக இருந்து வந்துள்ளது. அதற்கு ஆதாரமாக கம்ப ராமாயணத்தில் ராமர், குகனை சந்திக்கும் பொழுது, குகன் ராமருக்கு தேன், திணைமாவு, பழங்கள் போன்றவற்றை வழங்கி உபசரித்துள்ளார். தலைசிறந்த உபசரிப்பை இறைவனுக்கு கொடுத்து பெருமை கொண்ட இனம் நம் வேட்டுவர் இனம். விருந்துகளில் இலையில் முதலில் இனிப்பை தான் வைப்பார்கள். ஆம்! வேட்டுவக் கவுண்டர்கள் உறவுகளை மகிழ்ச்சியுடன் வரவேற்பதற்கான அடையாளமாக இனிப்பை கருதினார்கள்.

தீபாவளி திருநாளில் வீடுகளில் இனிப்புகள் தயாரித்து அக்கம்பக்கத்தினர் மற்றும் உறவினர்களுக்கு பரஸ்பரம் பலகாரங்களை பரிமாறிக் கொண்டு தீபாவளியை கொண்டாடுவது வழக்கம். முன்பெல்லாம் பண்டிகைக்கு ஒரு மாதம் முன்பிருந்தே என்னென்ன பலகாரங்கள் செய்யலாம் என இல்லத்தரசிகள் திட்டமிட ஆரம்பித்து விடுவர். முறுக்கு, அதிரசம் தவறாமல் இடம்பெறும். இதற்கு மாவு தயாரிப்பது, அக்கம்பக்கத்தினர் அல்லது உறவினர்களோடு இணைந்து முறுக்கு, அதிரசம் தயாரிப்பது என தீபாவளி களைகட்டத் தொடங்கிவிடும். இன்றும் அதே உற்சாகத்துடன் அனைத்து வயதினரும் தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். ஆனால் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் நிலையில் தீபாவளி பண்டிகைக்காக முன்பு போல பலகாரங்கள் செய்வதற்கு நேரம் ஒதுக்க முடியவில்லை என்கின்றனர் இந்தக் கால இல்லத்தரசிகள்.



நாகரீகம் வளர வளர நமக்கு நேரமின்மை காரணமாக வீடுகளில் செய்யும் இனிப்பு வகைகளை குறைத்துக் கொண்டு கடைகளில் கிடைக்கும் இனிப்புகளை வாங்கி தீபாவளியை கொண்டாடுகிறோம். நல்ல தரமான முறையில் தயாரிக்கப்பட்ட இனிப்புகளையே வாங்குவது அவசியம். இனிப்புகளை நல்ல முறையில் தயாரித்துக் கொடுக்கும் நமது உறவுகளிடம் வாங்கினால் அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள்; நம்முடைய தீபாவளியும் மகிழ்ச்சியாக அமையும். நம் வேட்டுவக்கவுண்டர் சமுதாய உறவுகளை ஊக்கப்படுத்தும் வகையில் நம் உறவுகள் வைத்திருக்கும் இனிப்பு கடைகளிலேயே வாங்கி தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாடுவோம்.


S.R.M.
ஸ்வீட்ஸ் & கேக்ஸ்
SRM
ஈரோடு, கோபி, திருச்செங்கோடு, கரூர் & நாமக்கல்.
ரூபாய்
மினி ஜிலேபி 1 கிலோ 340
லட்டு 1 கிலோ 380
பாதுஷா 1 கிலோ 380
சோன்பப்டி 1 கிலோ 380
மைசூர்பா 1 கிலோ 540
ஹார்லிக்ஸ் பர்பி 1 கிலோ 540
பூஸ்ட் பர்பி 1 கிலோ 540
பால்பேடா 1 கிலோ 540
குல்கந் பர்பி 1 கிலோ 540
மேங்கோ பர்பி 1 கிலோ 540
வெண்ணிலா பர்பி 1 கிலோ 540
சாக்லேட் பர்பி 1 கிலோ 540
மில்க் ரோல் 1 கிலோ 540
பிஸ்தா ரோல் 1 கிலோ 1000
முந்திரி கேக் 1 கிலோ 900
பாதாம் கேக் 1 கிலோ 1000
கசட்டா பர்பி 1 கிலோ 540
அவுல் மிக்சர் 1 கிலோ 340
பூண்டு மிக்சர் 1 கிலோ 340
கார பூந்தி 1 கிலோ 340
புதினா மிக்சர் 1 கிலோ 340
பாம்பே மிக்சர் 1 கிலோ 340
முந்திரி கார்ன் மிக்சர் 1 கிலோ 360
பெப்பர் முந்திரி 1 கிலோ 1050
பாதாம் மிக்சர் 1 கிலோ 420
எள், கார முறுக்கு 1 கிலோ 320
புடி முறுக்கு 1 கிலோ 320
பொட்டேடோ சிப்ஸ் 1 கிலோ 400
Spl. ஏலக்காய் சோன்பப்டி பாக்ஸ் 150 கிராம் 75
Spl. பாதாம் சோன்பப்டி பாக்ஸ் 150 கிராம் 75
Spl. பிஸ்தா சோன்பப்டி பாக்ஸ் 150 கிராம் 75
Spl. ஆரஞ்சு சோன்பப்டி பாக்ஸ் 150 கிராம் 80
Spl. சாக்லேட் சோன்பப்டி பாக்ஸ் 150 கிராம் 80
தீபாவளி ஸ்பெஷல் ஸ்வீட்ஸ்
ஆப்பிள் அல்வா, பைனாப்பிள் அல்வா மற்றும் அனைத்து விதமான பெங்காளி ஸ்வீட்களும் கிடைக்கும்.
தீபாவளி ஸ்பெஷல் ஸ்வீட்ஸ்
500g - ₹ 190
1 kg - ₹ 380
500g - ₹ 270
1 kg - ₹ 540
600g - ₹ 600
9 Pcs - ₹ 400
ஆர்டர்கள் வரவேற்கிறோம்
ஈரோடு, கோபி, திருச்செங்கோடு, கரூர் & நாமக்கல்.
97884 79479

# வீட்டை அலங்கரிக்கும் பர்னிச்சர்கள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள்



தீபாவளி பண்டிகைக்கு குறைந்த செலவில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்களை வாங்கிச் செல்ல வுட்ஜோன் நிறுவனம் அட்டகாசமான சலுகைகளை அறிவித்துள்ளது. வுட் ஜோன் நிறுவனத்தின் நிறுவரான LIC கோவிந்த் என்னும் அடைமொழியுடன் அழைக்கப்படும் திரு. கோவிந்தராஜு அவர்கள் கரைய வேட்டுவக்கவுண்டர் குலத்தை சார்ந்தவர். வுட் ஜோன் மாடர்ன் ஃபர்னிச்சர் என்ற பெயரில் கவுந்தப்பாடியிலும், வுட் ஜோன் டிசைன்ஸ் என்ற பெயரில் விளக்கேத்தியிலும் டைல்ஸ், பர்னிச்சர்கள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்களை விற்பனை செய்து வருகிறார். வீட்டிற்கு தேவையான அனைத்து பர்னிச்சர்கள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், கல்யாண சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், கவுந்தப்பாடியில் 4500 சதுர அடியிலும், விளக்கேத்தியில் 15000 சதுர அடியிலும் இவரது ஷோரூம்கள் செயல்பட்டு வருகிறது.

முன்னணி பிராண்டுகளின் டிவி, பிரிஜ், வாஷிங்மெஷின், பிரஷர் குக்கர், மிக்சி, வெட் கிரைண்டர், இண்டக்ஷன் ஸ்டவ், நான்ஸ்டிக் ரகங்கள், டின்னர் செட், ஹாட் பாக்ஸ், அயர்ன் பாக்ஸ், ரொட்டி மேக்கர், மிக்சி ஜார்கள் அனைத்தும் தரமானவைகளாக தள்ளுபடி விலையில் கிடைக்கின்றன. மேலும் கட்டில், மெத்தை, சோபா, டைனிங் டேபிள், டிரெசிங் டேபிள், பெட்ரூம் செட், மரம் மற்றும் இரும்பு பீரோக்கள் அனைத்திலும் ஏராளமான கலெக்ஷன்கள் உள்ளன. வடிக்கையாளர்களின் வசதிக்கு ஏற்ப மாதத் தவணை முறையில் பொருட்கள் வாங்கும் வசதியும் உள்ளது.








இதுமட்டுமல்ல, வாடிக்கையாளர்கள் விரும்பும் டிசைன்களில் 'சோபா செட்' செய்து தரப்படுகிறது. நமது வீட்டிற்கே வந்து ஹாலை அளவெடுத்து கஸ்டமைஸ்டு ஷோபா செட் செய்து தருகிறார்கள். அனைத்து பொருட்களுக்கும் எக்சேஞ்ச் வசதியும் உள்ளது. தீபாவளி சிறப்பு ஆஃபரில் பொருட்கள் வாங்குபவர்களுக்கு டோர் டெலிவரி இலவசம். மேலும் நமது உறவுகளுக்கு 5% சிறப்பு தள்ளுபடியும் உண்டு. நீங்கள் இந்த தீபாவளிக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் ஏதேனும் வாங்க திட்டமிட்டிருந்தால் இந்த பண்டிகை கால சிறப்பு தள்ளுபடியை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# பட பட பட்டாசு



குழந்தைகள் ஒவ்வோர் ஆண்டும் ஆசையாய் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நாள்தான் தீபாவளித் திருநாள். தீபாவளி பண்டிகை நெருங்கும் நிலையில் பட்டாசு விற்பனை சூடுபிடிக்க தொடங்கியுள்ளது. பட்டாசுதான் வெடிப்போரையும், அதை கண்டு ரசிப்போரையும் பரவசப்படுத்தும். இந்த வருடம் தீபாவளிக்காக பல புதிய பட்டாசு ரகங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

## சிறுவர்களைக் கவரும் பட்டாசுகள்:

சிறுவர்களைக் கவரும் வகையில் ஆண்டுதோறும் சிவகாசியில் வகை வகையான பட்டாசுகளை அறிமுகம் செய்வது வழக்கம். இந்த ஆண்டும் சிறுவர்களைக் கவரும் வகையில் டிரோன் பட்டாசு, ஹெலிகாப்டர் பட்டாசுகள் உள்ளிட்ட பல புது ரகங்கள் அறிமுகமாகியுள்ளன. மியுசிக்கல் சரவெடியானது தீப்பற்ற வைத்தவுடன், விசில் சப்தத்துடன் வெடிக்கும் தன்மை

உடையது. இதனால், குழந்தைகள் கூட அச்சமின்றி இசை ஒலியுடன் வெடிப்பதை பார்த்து ரசிக்க முடியும். பென்சில் வகையில் லேசர் ஷோ என்ற புது வரவு வந்துள்ளது. மேலும் சிறுவர்களைக் கவரும் வகையில் அசல் துப்பாக்கிகளைப் போலவே தீபாவளி துப்பாக்கிகள் விற்பனைக்கு வந்துள்ளன.



**இளைஞர்களைக் கவரும் பட்டாசுகள் :**

இவ்வாண்டு டின் ரக பட்டாசுகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. டின் பீர் போன்று மேலே ஒப்பன் செய்து அதில் உள்ள திரியை பற்ற வைத்தால் 15 அடி வரை உயரம் சென்று பச்சை, மஞ்சள், சிவப்பு வண்ணங்களில் பொறிப் பொறியாய் பீறிட்டு வரும். இளைஞர்களை கவரும் வகையில் இந்த பட்டாசுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வகை பட்டாசுகள் வாட்ஸ்அப், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் டிரெண்டிங் ஆகி வருகின்றன.



### வண்ணமயமான ஒளிரும் பட்டாசுகள் :

வெடிக்கும் பட்டாசுகளை விட ஒளிரும் வகையிலான பட்டாசுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதுசார்ந்த பட்டாசு வகைகள் பெருமளவில் சந்தைக்கு வந்துள்ளன. குழந்தைகளுக்கான பாப் பாப், வண்ணமயமான புஸ்வாணங்களும் ஏராளமான வகைகளில் விற்பனைக்கு வந்துள்ளன. பெரும்பாலும் சிறுவர்கள், பெண்கள் பயன்படுத்தும், பேன்ஸி ரக ஒளிரும் பட்டாசுகளில்தான் அதிகளவில் புதிய ரகங்கள் வந்துள்ளன.




### பாதுகாப்பான வெடிகள்:







சுற்றுச் சூழல், விபத்து, பாதிப்பு போன்ற காரணங்களால் வெடித்துச் சிதறும் பட்டாசுகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது. வெடிக்கும் பட்டாசுகளின் ஒலி அளவும், வெடிக்கும் அளவும் குறைக்கப்பட்டு பட்டாசுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறைந்த சப்தத்துடன், குறைவான அளவு காற்று மாசு ஏற்படுத்தும் பசுமை பட்டாசுகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளது.

**கிஃப்ட் பாக்ஸ்கள் விற்பனை :**

வணிக நிறுவனங்கள், ஐடி நிறுவனங்கள் தங்களது ஊழியர்களுக்கும், பொது மக்கள் தங்களது உறவினர்கள், மற்றும் நண்பர்களுக்கும் அன்பளிப்பாக பட்டாசு 'கிஃப்ட் பாக்ஸ்கள்' வழங்குவது வழக்கம். மக்கள் விரும்பும் அனைத்து பட்டாசுகளும் அடங்கிய கிஃப்ட் பாக்ஸ்களுக்கு கடந்த ஆண்டுகளைப் போன்றே இந்த ஆண்டும் வரவேற்பு அதிகரித்துள்ளது.



## பட்டாசு வெடிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் என்னென்ன?

- பட்டாசுகளை திறந்தவெளியில் வைத்து வெடிக்க வேண்டும்.
- எளிதில் தீப்பிடிக்கும் வகையிலான ஆடைகளை அணியக் கூடாது.
- குழந்தைகள் தனியாக பட்டாசு வெடிப்பதை அனுமதிக்கக் கூடாது.
- பட்டாசு வெடிக்கும் போது அருகில் தண்ணீர் வைத்திருக்க வேண்டும்.
- காலில் செருப்பு அணிந்திருக்க வேண்டும்.
- பட்டாசு வெடித்தபின் கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவ வேண்டும்.
- முழுவதும் வெடிக்காத பட்டாசுகளை தண்ணீர் ஊற்றி அணைக்க வேண்டும்.
- சானிடைசர் பயன்படுத்திவிட்டு பட்டாசு வெடிக்கக் கூடாது.

உச்ச நீதிமன்றம் வெளியிட்ட தகவலின் படி, அதிகப்படியான சத்தம் மற்றும் காற்று மாசு ஏற்படுத்தும் பட்டாசுகளை விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பட்டாசின் ஒலி அளவு 125 டெசிபல்களுக்கு மேல் இருக்கக்கூடாது என உத்தரவிட்டுள்ளது. மக்கள் தீபாவளியின் போது காலை 6 - 7 மணி வரை மாலை 7 - 8 மணி வரை பட்டாசு வெடிக்கலாம் என்று உத்தரவிட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்கு அரசு குறிப்பிட்ட நேரத்தில் பட்டாசுகளை வெடித்து, நமது பாரம்பரிய விழாவை மகிழ்ச்சியாக அனைவரும் கொண்டாட வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். பட்டாசுகள் வெடிக்கும்போது போதிய பாதுகாப்பு முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

# நமக்கு நாமே
# தீபாவளி பரிசு போட்டி

VG BUSINES TYCOONS, VG BUSINESS MAGAZINE மற்றும் VETTUVAR TV நடத்திய நமக்கு நாமே திட்டத்தின் தீபாவளி பரிசு போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற திரு.வடிவேலு, திரு.மோகனசுந்தரம், திரு.கௌதம் மற்றும் திரு.ராமகிருஷ்ணன் அவர்களை வாழ்த்துகிறோம். திரு.வடிவேலு அவர்கள் தனது குடும்ப விழாவிற்கு தேவையான அனைத்து வணிக பரிவர்த்தனைகளையும் நமது இன வணிகர்களிடமே செய்துள்ளார். இவர் செய்த வணிக மதிப்பு ஆறு லட்சம் ரூபாய். திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் தனது வீடு கட்டுவதற்கு தேவையான அனைத்து பொருட்களையும் நமது வணிகர்களிடமே வாங்கியுள்ளார். அவர் செய்த வணிகத்தின் மதிப்பு ஐந்து லட்சம் ரூபாய். திரு.மோகனசுந்தரம், திரு.கௌதம் அவர்களும் தானும் மற்றவர்களுக்கு வணிகம் செய்து மற்றவர்களிடமும் இவர்கள் வணிகம் செய்து உள்ளார்கள். தரணி சோலார் நிர்வாகத்தினர் அவரது நிறுவனத்திற்கு தேவையானவற்றை வாங்கியதோடு மட்டுமல்லாமல் தனது நண்பர்களுக்கும் மற்றும் உறவினார்களுக்கும் பரிந்துரை செய்துள்ளார். வணிக மதிப்பு 7.5 லட்சம். நமது வேட்டுவக் கவுண்டர் சமுதாய வணிகர்களை ஆதரிக்கும் உறவுகள் அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். VG BUSINESS TYCOONS அமைப்பின் தாரக மந்திரமான நமக்கு நாமே திட்டத்தின் மூலம் நமது வணிக உறவுகளுடன் தொடர்ந்து வணிகம் செய்து வரும் நம் சொந்தங்களுக்கு நன்றி.


இணைந்து வழங்கும்




இணைந்து வழங்கும்
Tycoons



அடுத்த இதழில்

நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம்

(Be An Entrepreneur)

மனித வள மேம்பாட்டுப் பயிற்சியாளர் மற்றும் ஆராய்ச்சியாளர், வணிக மேம்பாட்டு ஆலோசகர் கே. வி. இரமேஷ் அவர்கள் எழுதும் தொடர் கட்டுரை...






# தீபாவளி சிறப்புப் பட்டி மன்றம்



விரைவில் வேட்டுவர் டி வி யில்

